# எட்டுத்தொகை அகநூல்களில் இடம்பெற்ற அளபடைகளில் அறிவியல்

35

**சு. மஞ்சு**

**இலக்கியத்துறை**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010.**

ஆய்வு நோக்கம்:-

இலக்கியங்கள் வாழ்வின் வெளிப்பாடு, அறிவியலோ அறிவின் வெளிப்பாடு, மனித வாழ்வின் பண்பாடுகளை விளக்கிக் காட்டும் கருவியாக இலக்கியம் அமைந்துள்ளது. பண்டையத் தமிழரின் வாழ்வியலில் இலக்கியங்கியங்களும், அறிவியலும் இரண்டற கலந்த ஒன்றாக அமைந்துள்ளதை சங்க இலக்கியங்கள் வழி நம்மால் அறிந்துக்கொள்ள முடிகிறது.

தொன்மைத் தமிழர்களின் அறிவியல் சிந்தனை வானியல், நிலவியல், நீரியல், உயிரியல், உளவியல், உடலியல், மருந்தியல், கணிதவியல், சோதிடவியல் எனப் பல்வேறு துறைகளில் தமிழரின் சிந்தனை ஊற்றுக்களை சங்க இலக்கியங்கள் வழி நம்மால் அறிந்துக் கொள்ளமுடிகிறது. ஒரு மொழியின் வளமைக்கு இலக்கியமும், இலக்கணமும் இன்றியமையாத ஒன்றாகும். ஆகவே இலக்கியங்களில் வெளிப்படும் அறிவியல் சொற்களை சார்பெழுத்துக்களில் ஒன்றான அளபெடை வழி இனம் காணும் நோக்கில் இக்கட்டுரையானது அமைகிறது.

**திறவுச்** சொற்கள்:- **இன்னிசை,** செய்யுளிசை, **அளபெடை**

**அளபெடைகள் :-**

அளபு என்றால் அளவு எனவே அளவு + எடை = அளபெடை என்பது ஒலியளவை அதிகமாக எடுப்பது என்று பொருள். செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய எழுத்துக்கள் தனக்குரிய மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிக்கும்,

**“நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய**
**கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்” (தொல். 6)**

என தொல்காப்பியர் இரண்டு மாத்திரைக்கு மேல் எழுத்துக்களை நீட்டி ஒலிக்க வேண்டி சூழலும் ஏற்படும் என்கிறார்.

**“குன்றிசை மொழிவயின் நின்றுஇசை நிறைக்கும்**
**நெட்டெழுத்து இம்பர் ஒத்தகுற் றெழுத்தே” (தொல். 41)**

இந்நூற்பா ஆ, ஈ, ஊ, ஏ என்பவை தமக்கு இனமாகிய குற்றெழுத்துக்களை பெற்றுவரும்,

**“ஐஔ என்னும் ஆயிர் எழுத்திற்கு**
**இகர உகரம் இசைநிறைவு ஆகும்” (தொல்.42)**

ஐ, ஔ எழுத்துக்களுக்கு இகரமும், உகரமும் இசை நிறைவாகும் என்கிறது தொல்காப்பியம்.

அளபெடையை உயிரளபெடை, ஒற்றளபெடை என தொல்காப்பியமும் அதற்கு பின் வந்த நன்னூல் செய்யுளிசை, இன்னிசை, சொல்லிசை என்றும் வகைப்படுத்தியுள்ளது.

**அளபெடை சொற்களில் அறிவியல்**

சங்க இலக்கியங்களில் புலவர்கள் தங்களது பாடல்களுக்கு ஓசை குறையும்போது ஓசையை நிறைவு செய்யவும், ஓசை குறையாத போதும் இனிய ஓசைக்காகவும் அளபெடை சொற்களை மிகுந்த அளவில் பயன்படுத்தியுள்ளதை காண முடிகிறது. அளபெடையில் மரம், விலங்கு, பறவை என உயிரியல் சார்ந்த சொற்களை பெருமளவில் காண முடிகிறது. எட்டுத்தொகை அக நூல்களில் உள்ள உயிரியல் சார்ந்த அளபெடைகளை பின்வருமாறு காணலாம்.

**நற்றிணையில் அளபெடை சொற்களில் உயிரியல்**

உழவுத்தொழிலுக்கு இன்றியமையாதது மழையாகும். மழைப் பொழிய மரங்களின் பங்கு இன்றியமையாதது ஆகும். அம்மரங்களை பற்றிய அளபெடைச் சொற்கள் நற்றிணையில் ஒன்பது இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"தேம்பாய் மராஅம் கமழும் கூந்தல்" (நற். 20-3)**

என இங்கு மராஅம் என்ற சொல் வெண்கடப்ப மரத்தைக் குறிக்கிறது. ஓசையை நிறைவு செய்வதற்காக 'அ' அளபெடுத்து வந்ததால் இது செய்யுளிசை அளபெடை ஆகும்.

**"உலறுதலை உகாஅய்ச் சிதர்சிதர்த்து உண்ட" (நற். 66-2)**

உகாஅய் என்ற சொல் உகாய் மரத்தைக் குறிக்கும் செய்யுளிசை அளபெடையையும் பெற்றுள்ளது.

மேலும் மாஅத்த (87-1), (157-5), மாஅத்து (118-1, 343-3, 381-4), மராஅத்து (148-5), ஆகியவை மாமரத்தை குறிக்கும் இன்னிசை அளபெடைச் சொற்களாக வந்துள்ளன. மாஅரை (307-7) புன்னை மரத்தைக் குறிக்கும் இன்னிசை அளபெடையாக வந்துள்ளது.

பறவைகள், விலங்குகள் பற்றியும் அளபெடைச் சொற்கள் அமைந்துள்ளன.

**"கண்ணகத்து எழுதிய குரீஇப் போலக்" (நற். 58-3)**

குரீஇ நற்றிணையில் 181-1, 231-6, 366-9 என குருவியைக் குறிக்கக் கூடிய வேறுபாட்டு அளபெடைச் சொற்கள் நான்கு இடத்தில் அமைந்துள்ளது.

**"கருங்கண் வராஅல் பெருந்தடி மிளிர்வையோடு" (நற். 60-4)**

என வராஅல் என்ற செய்யுளிசை அளபெடை வரால் மீனை குறிக்கின்றது.

**"கராஅம் பேணாய் இரலரின்" (நற். 292-8)**

கராஅம் என்ற செய்யுளிசை அளபெடைச் சொல் முதலையைக் குறிக்கின்றது.

இவ்வாறு மரத்தை பற்றி ஒன்பது இடத்திலும், குருவி பற்றி நான்கு இடத்திலும் மீன், முதலை பற்றி தலா ஒரு இடங்களிலும் என அளபெடை சொற்கள் பதினைந்து (15) இடங்களில் அமைந்துள்ளது.

**ஐங்குறுநூறு அளபெடைச் சொற்கள் உயிரியல்**

**"பூத்த மாஅத்துப் புலால்அம் சிறுமீன்" (ஐங். 10-4)**

மாஅத்து என்ற மாமரத்தை குறிக்கும் இன்னிசை அளபெடைச் சொல் ஐங்குறுநூற்றில் ஆறு (8-4, 14-2,19-2, 61-1 213-1) இடங்களில் அமைந்துள்ளது.

**"வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள்" (ஐங். 48-2)**

என வரால் மீனை குறிக்கும் செய்யுளிசை அளபெடைச் சொல் என மொத்தம் ஐங்குறுநூற்றில் ஏழு உயிரியல் அளபெடை சொற்கள் அமைந்துள்ளது. **குறுந்தொகை அளபெடைச் சொற்களில் உயிரியல்**

மரத்தை குறிக்கும் அளபெடைச் சொற்கள் மொத்தம் பதினான்கு உள்ளது.

**"சிலம்பு அணி கொண்ட வலம்சரி மராஅத்து" (குறுந். 22-3)**

மராஅத்து என்ற வெண்கடப்பமரம் இன்னிசை அளபெடை பெற்று வந்துள்ளது.

| வ. எண் | சொல் | பொருள் | அளபெடை | பாடல் எண் |
|---|---|---|---|---|
| 1. | யாஅம் | பாலை நில மரம் | செய்யுளிசை | 37-3 |
| 2. | மராஅத்த | செய்கடம்பு மரம் | இன்னிசை | 87-1 |
| 3. | மராஅத்த | வெண்கடம்பமரம் | இன்னிசை | 92-3 |
| 4. | யாஅம் | யாமரம் | செய்யுளிசை | 198-1, 232-5 |
| 5. | மராஅத்து | மராமரம் | இன்னிசை | 211-4 |
| 6. | யாஅத்து | யாமரம் | இன்னிசை | 255-1 |
| 7. | உகாஅய் | உகாய் மரம் | செய்யுளிசை | 274-2, 36-4 |
| 8. | மாஅத்து | மாமரம் | இன்னிசை | 278-1, 306-4, 331-6 |
| 9. | யாஅ | யாமரம் | செய்யுளிசை | 232-5 |

**"கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ" (குறுந். 46-2)**

குருவி என்ற வேறுபாட்டு அளபெடை சொற்கள் குரீஇ (72-5, 85-3, 374-) என்னும் நான்கு இடத்தில் அமைந்துள்ளது.

**"எழாஅல் உற வீழ்ந்தெனக் கணவற் காணாது" (குறுந். 151-2)**

எழாஅல் என்ற செய்யுளிசை அளபெடைச் சொல் புல்லூறு என்னும் பறவையை குறிக்கின்றது.

குறுந்தொகையில் மொத்த பதினெட்டு உயிரியல் அளபெடைச் சொற்கள் அமைந்துள்ளன.

**கலித்தொகை அளபெடைச் சொற்களில் உயிரியல்**

**"ஒருகுழை ஒருவன் போல் கிணர்சேர்ந்த மராஅமும்"**

**(கலித். 26-17)**

மராஅமும் என்ற இன்னிசை அளபெடைச் சொல் இங்கு வெண்கடம்பமரத்தை குறிக்கின்றது. அதுபோல் யாஅம் (143-3) என்ற யாமரத்தைக் குறிக்கும் சொல் செய்யுளிசை அளபெடை பெற்று வருகிறது.

**“இன்பத்தின் இகந்து ஒரீஇ இலைதீந்த உலவையால்”**

**(கலி.11-10)**

ஒரீஇ வேறுபாட்டு அளபெடையையும் குருவி என்ற பொருளிலும் அமைந்துள்ளது. அதுபோல் சுறாஅ (147-42) மீனைக் குறிக்கும் செய்யுளிசை அளபடை ஆகும். கடாஅத்து (21-2) ஆண்யானையைக் குறிக்கும் இன்னிசை அளபெடை என கலித்தொகையில் மொத்தம் ஐந்து உயிரியல் சார்ந்த அளபெடைச் சொற்கள் அமைந்துள்ளது.

**அகநானூறு அளபெடைச் சொற்களில் உயிரியல்**

மரம் பற்றிய இருபத்தியெட்டு அளபெடைச் சொற்கள் அமைந்துள்ளது. அவைகள்,

| **வ. எண்** | **பொருள்** | **சொல்** | **அளபெடை** | **பாடல் எண்** |
|---|---|---|---|---|
| 1. | மராமரம் | மராஅத்த | இன்னிசை | 3-11 |
| | | மராஅம் | செய்யுளிசை | 21-12 |
| | | மராஅ | செய்யுளிசை | 97-8 |
| 2. | மாமரம் | மாஅத்து | இன்னிசை | 37-8, 97-20, 117-15, 229-18, |
| | | யாஅத்து | இன்னிசை | 187-15, 236-7, 263-8 |
| 3. | யாமரம் | யாஅத்து | இன்னிசை | 17-16, 33-3, 257-14, 287-11 |
| | | யாஅம் | செய்யுளிசை | 59-8 |
| | | யாஅ | செய்யுளிசை | 65-13 |
| 4. | வெண் கடப்ப மரம் | மராஅம் | செய்யுளிசை | 81-8, 172-7. 211-2, 261-4 |
| | | மராஅத்து | இன்னிசை | 83-1, 199-3, 221-7, |
| | | மராஅத்த | இன்னிசை | 158-13, |
| | | மராஅ | செய்யுளிசை | 265-20 |
| 5. | அடிபெருத்த மரம் | பராஅரை | இன்னிசை | 270-6 |
| 6. | உகாமரம் | உகாஅ | செய்யுளிசை | 293-8 |

யானையைக் குறிக்கும் அளபெடைச் சொல் நான்கு இடங்களில் அமைந்துள்ளது.

**“மிஞிறு ஆர் கடாஅம் கரந்துவிடு கவுள”**

**(அகம். 207-8)**

கடாஅ (144-13), மராஅ (18-4), கடாஅம் (298-9) என யானையை குறிக்கும் நான்கு சொற்களுமே செய்யுளிசை அளபெடையில் அமைந்துள்ளது.

கராஅம் (18-3) என்ற செய்யுளிசை அளபெடை முதலைலயை குறிக்கின்றது.

வராஅல் (196-2, 216-2), இறாஅல் (286-6) என்ற மீன்களைக் குறிக்கும் சொல் மூன்றும் செய்யுளிசை அளபெடையில் அமைந்துள்ளது. அகநானூற்றில் உயிரியல் சொற்கள் அளபெடையில் மொத்தம் 36 இடம் பெற்றுள்ளது.

**முடிவுரை**

உயிரியல் சார்ந்த அளபெடைச் சொற்கள் நற்றிணையில் 15 இடங்களிலும் ஐங்குறுநூற்றில் ஏழு இடங்களிலும், குறுந்தொகையில் 18 இடங்களிலும், கலித்தொகையில் ஐந்து இடங்களிலும், அகநானூற்றில் 36 இடங்களிலும் என மொத்தம் 81 இடங்களில் உயிரியல் சார்ந்த அளபெடைச் சொற்கள் அமைந்துள்ளது. அவற்றை பகுத்தும், தொகுத்தும் முழுவதுமாக இக்கட்டுரையில் கண்டறியப்பட்டுள்ளது.

**துணை நின்ற நூல்கள்**

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. கலித்தொகை
5. அகநானூறு
6. தொல்காப்பியம்
7. நன்னூல்
8. யாப்பருங்கலக்காரிகை